இலங்கை திட்டமிடல் சேவையின் தரம்1 பணிப்பாளர் திட்டமிடல் பதவி

மருத்துவ வழங்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை பிரிவு - சுகாதார அமைச்சு

மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு இலங்கை திட்டமிடல் சேவையின் தரம்। இன் பொருத்தமான தகைமையுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகும். (அரச சேவைகள் ஆணைக்குழுவின் 02/2022 எனும் சுற்றறிக்கையின்படி)

திட்டமிடல் சேவை/சேவை வகுதியின் தரம்1 இனைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில்,03 ஆண்டுகள் தொடர்ச்சியான, செயல்ரீதியான மற்றும் திருப்திகரமான சேவையுடன் சேவை வகுதியின் தரம்11 இன் அலுவலர்கள் பதவியின் கடமைகளை முழுநேர அடிப்படையில் மேற்கொள்வதன் பொருட்டு நியமனங்கள் வழங்குவதற்காக பரிசீலிக்கப்படுவார்கள்.

பதவியில் கடமைகளை மேற்கொள்ளுதல் அதிகபட்சமாக ஒரு வருட காலத்திற்கு என்பதுடன் பொது சேவை ஆணைக்குழு நடைமுறை விதி 141 இற்கு உட்பட்டதாக மேலும் நீடிப்பதற்கான சாத்தியப்பாட்டுடன் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் இதில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் (curriculum vitae) உள்ளவாறு முறையாக பூர்த்தி செய்து 2023.04.10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு மேலதிக செயலாளர், 525, யுனியன் பிளேஸ் , கொழும்பு - 02 எனும் முகவரியை அடையக்கூடியவாறு தமது திணைக்கள தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் **எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

2.0 விண்ணப்பதாரியின் சுயவிபரம்

2.1 அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள்-

I. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் விடயப் பரப்பில் ஆகக்குறைந்தது 03 வருட அனுபவத்தை கொண்டிருத்தல்
II. மேம்பாட்டுக் கொள்கை, பொருளாதாரம், வணிகம், புள்ளியியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான துறையில் முதுகலைப் பட்ட (Postgraduate) தகைமையைப் பெற்றிருத்தல்
III. ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்

2.2 ஆற்றல்

I. உள்நாட்டு மருந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான உத்திகளை அடையாளம் காணும் திறன்

II. சிறந்த மருத்துவ விநியோகச் சங்கிலி முகாமைத்துவ வலையமைப்பை நிறுவுவதற்கு உதவும் திறன்

2.3. நடத்தையில் நிபுணத்துவம்

I. உள்ளூர் மருந்து உற்பத்தியை அதிகரிக்க உள்ளூர் முதலீட்டாளர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்துதல் மற்றும் பேணுதல்

II. ஒரு நல்ல மருந்து விநியோகச் சங்கிலி பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மேற்பார்வை

3.0 தெரிவு முறை

(நாடளாவிய சேவை)

தெரிவானது விண்ணப்பதாரியின் சுய விபரங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றினூடாக சிரேஷ்ட நிலை மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளின் திறமை அடிப்படையில் இடம்பெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப் படுவார்கள்.

3.1 புள்ளி வழங்கப்படும் முறைமை

தலைப்பு	ஆக்கூடிய புள்ளிகள்	மதிப்பிடப்படும் செயன்முறை
சிரேஷ்ட நிலை ஆகக்கூடிய புள்ளிகள் சிரேஷ்ட நிலைக்கு வழங்கப்பட்டு ஏனைய விண்ணப்பதாரர்கள் விகிதாசாரப்படி சிரேஷ்ட நிலைக்கான புள்ளிகள் வழங்கப்படும்.	50	சுயவிரம்./ நேர்முகப்பரீட்சை
அபிவிருத்தி திட்டமிடல் துறையில் அனுபவம் குறித்த துறையில் பதவிக்காலம்/அந்த விடயப்பரப்பினை வெளிப்படுத்துதல் ஆகியவற்றுக்கு மேலதிகமாக, திட்டமிடல் துறையில் பங்கேற்பதன் மூலம் அல்லது வேலையில் ஈடுபடுவதன் மூலம் பெற்ற அறிவின் நுணுக்கம் அல்லது விடயப்பரப்பின் தேர்ச்சி மதிப்பீடு செய்யப்படும்.	20	
தொழில்சார் தகைமைகள்/ ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் **1). பொருளாதாரம்/ அபிவிருத்திக்கொள்கை ஆகிய துறையில் முதுகலை பட்டத் தகைமைகள்** அ) ஆராய்ச்சி அடிப்படையிலான முதுகலை பட்டங்கள் - 07 புள்ளி ஆ) முதுகலை பட்டப்படிப்பு துறையுடன் சம்பந்தப்பட்டது- 06 புள்ளி இ) முதுகலை டிப்புளோமா - 04 புள்ளி ஈ) பட்டங்கள் /டிப்புளோமா - 02 புள்ளி * **புள்ளிகள் அதிகூடிய தகைமைகளுக்காக வழங்கப்பட வேண்டும்.**	*10* 20	
(2) **திட்டமிடல் துறையில் பெற்ற பயிற்சி** அ) 3 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு- 01 புள்ளி		

ஆ) 10 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 0.5 புள்ளி இ) 3 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - 0.2 புள்ளி (3) **<u>ஆங்கிலத்தில் தேர்ச்சி</u>** * அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஆங்கில மொழி டிப்புளோமா/IELTS கல்வியில் ஒட்டுமொத்த புள்ளி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL –CBT 213 அல்லது அதற்குமேல் அல்லது TOEFL- PBT அல்லது அதற்கு மேல் - 02 புள்ளிகள் ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஆங்கில மொழி சான்றிதழ் - 01 புள்ளி * **புள்ளிகள் அதிகூடிய தகைமைகளுக்காக மாத்திரம் வழங்கப்பட வேண்டும்**.	10	
<u>பலங்கள்</u> மேலே பிரிவு 2.2 இல் குறிப்பிடப்பட்டவாறு விடயங்கள் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளப்படவேண்டும் மற்றும் விண்ணப்ப தாரர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும்	10	நேர்முகப்பரீட்சை
<u>நடத்தையில் நிபுணத்துவம்</u> மேலே 2.3இல் குறிப்படப்பட்டுள்ளவாறு செயற்றிறன்மிக்கதாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள்	10	

குறிப்பு1;- மேற்படி புள்ளியிடும் முறைமையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" என மேலே குறிப்பிடப்பட்டிருப்பது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் என்று பொருள்படும்

குறிப'பு 2 ;- மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைமையில் காட்டப்பட்டுள்ள அனைத்து முதுகலை பட்ட தகைகைகளும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து

பெற்றுக்கொள்ளப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய பட்டங்கள் வழங்குகின்ற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட அத்தகைய பட்டங்கள் யாவும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(மேற்படி விண்ணப்பங்கள் கோருதல் தொடர்பாக இந்த அறிவித்தலில் யாதேனும் முரண்பாடுகள் அல்லது தெளிவின்மைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஆங்கிலமொழியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலப் பிரதியாக கருதவும்.)

Sgnd/

செயலாளர்.
சுகாதார அமைச்சு,

மாதிரிப்படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி

2. விண்ணப்பதாரி பற்றிய விபரங்கள்;-

I. பெயர்;-
II. தேசிய அடையாள அட்டை இல;-
III. வயது;-
IV. வதிவிட முகவரி;-
V. தொலைபேசி இலக்கங்கள்;-
VI. மின்னஞ்சல் முகவரி;-
VII. சேவையின் தரம்;-
VIII. சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி;-
IX. சேவையின் தற்போதைய தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற திகதி;-
X. பதவிப்பெயர்;-
XI. தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி;-
XII. அமைச்சு;-
XIII. திணைக்களம்;-

(வேறு ஏதேனும் தேவையான மேலதிக தகவலை இணைக்கவும்)

3. தற்போதைய தரத்தில் சேவை பற்றிய விபரங்கள்

I. சம்பளமற்ற/அரைச்சம்பளத்துடனான விடுமுறை

தொடக்கம்	வரை	மொத்த காலப்பகுதி (வருடங்கள்/மாதங்கள்/தினங்கள்)	நோக்கம்

II. வினைத்திறன் தடைகள்

வினைத்திறன் தடை	பூர்த்தி செய்ய வேண்டிய திகதி	பூர்த்தி செய்த திகதி	சலுகை/விதிவிலக்கு ஏதாவது வழங்கப்பட்டிருந்தால், அக் கடிதம் வழங்கப்பட்ட திகதி மற்றும் இலக்கம்

III. **ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருந்தால்;-**

குற்றப்பத்திரிகையின் இலக்கம் மற்றும் திகதி	ஒழுக்காற்று கட்டளை (இன்னமும் முடிவடையாது நடைமுறையிலிருந்தால், அதனை குறிப்பிடவும்)	தண்டணை/ தண்டணைகள் ஏதாவது இருப்பின் அதன் செயல்வலுப் பெறும் திகதி (குற்றம் தொடர்பான ஆணையின் திகதி)	பொது சேவை ஆணைக்குழு நடைமுறை விதி 186 (ii) இன் பிரகாரம் திருப்திகரமான சேவையை கணக்கிடும்போது விடுபட்ட சேவையின் ஏதாவது காலப்பகுதி

4. அனுபவம்

4.1. சேவைக்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து கடந்த கால சேவைகள்;-

பதவி	அமைச்சு/திணைக்களம் /நிறுவனம்	காலப்பகுதி		பொறுப்புகளின் தன்மை பற்றி சுருக்கமாக விளக்கவும்
		தொடக்கம்	வரை	

4.2. ஏற்புடைய விடயத்தில் அனுபவம் (கடமை ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

பதவி	அமைச்சு/திணைக்களம் /நிறுவனம்	காலப்பகுதி		பொறுப்புகளின் தன்மை பற்றி சுருக்கமாக விளக்கவும்
		தொடக்கம்	வரை	

4.3. நாடளாவிய சேவைகளுக்காக மாத்திரம் (அனுபவத்தினூடாக பெறப்பட்ட விடயத்தில் ஆழமான அறிவு மற்றும் நிபுணத்துவத்தினை மதிப்பீடு செய்வதற்கு வினா ஒன்றினை உள்ளீடு செய்யவும்)

திட்டமிடல் *மற்றும்* *அபிவிருத்தித்* துறையில் பணியாற்றும் போது / குறித்த விடயத் துறையில் பொறுப்பில் இருந்த போது, ஒரு பிரச்சனையைக் கையாள்வதில் உங்கள் படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்புகளை நீங்கள் பயன்படுத்திய சந்தர்ப்பங்களை விபரிக்கவும். (ஆகக்கூடியது 150 சொற்கள்)

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

5.1 முதுகலை பட்டப்படிப்பு தகைமைகள் (Postgraduate qualifications)

முதுகலை பட்டப்படிப்பு தகைமைகள்	விடயம்	பல்கலைக்கழகம்/நிறுவனம்	செயல்வலுப் பெறும் திகதி

5.2. பயிற்சி

பயிற்சி	நிறுவனம்/அமைப்பு	காலப்பகுதி

5.3. மொழித் தேர்ச்சி

மொழி	தகைமை/நிறுவனம்/அமைப்பு	செயல் வலுப் பெறும் திகதி

5.4. (ஏற்புடையதாயின்) ஆராய்ச்சி, புதுமைகள் மற்றும் கண்டுபிடிப்புகள்

……

……..

எனது அறிவிற்கு எட்டியவரை மேற்படி விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிகின்றேன்

……..

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்*

விருப்பம் 1 - விண்ணப்பதாரியின் ஆள்விபரக்கோவையில் உள்ள நாளது வரைப்படுத்தப்பட்ட பதிவுகளின்படி இந்த சுய விபரக் கோவையின் பிரிவு 3 இல் வழங்கப்பட்ட விபரங்கள் சரியானவை என நான் சான்றளிக்கின்றேன். தற்போது விண்ணப்பதாரருக்கு எதிராக எந்த ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும். * மற்றும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவர்/அவளை பதிலீட்டுடன்/ பதிலீடின்றி அவர்/அவளுடைய தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்கமுடியாது. எனவும் நான் சான்றளிக்கின்றேன்.

விருப்பம் 11 - விண்ணப்பதாரியின் ஆள்விபரக்கோவையில் உள்ள நாளது வரைப்படுத்தப்பட்ட பதிவுகளின்படி இந்த சுய விபரக் கோவையின் பிரிவு 3 இல் வழங்கப்பட்ட விபரங்கள் சரியானவை என நான் சான்றளிக்கின்றேன். மற்றும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவர்/அவளை பதிலீட்டுடன்/ பதிலீடின்றி அவர்/அவளுடைய தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்கமுடியாது எனவும் மேலும், தற்போது விண்ணப்பதாரர் தொடர்பான பூர்வாங்க விசாரணை நடைபெற்று வருகிறது/ ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும், நான் சான்றளிக்கின்றேன். விண்ணப்ப தாரரின் தவறான நடத்தைக்கு எதிரான/ சந்தேகிக்கப்படும் குற்றச்சாட்டுகளின் தன்மை பின்வருமாறு,

……
……
……

***பொருந்தாத கூற்றினை நீக்கிவிடவும்**

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

……